கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 72/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி – 2 கிருஷ்ணன் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 10.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **கிருஷ்ணன்** | கிராமம் | |
| த/பெ | **ராமன்** | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | **74** |

**<u>பி.வ.சா.2 – கிருஷ்ணன் – முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது **பி.சா.ஆ.11**

**முதல் விசாரணை முடிக்கப்பட்டது.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வாதி எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் வீண் வழக்கு போட்டுள்ளார். என்ன பரிகாரம் எந்த சொத்திற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் சொத்திற்காக தாக்கல் செய்யவில்லை. புறம்போக்கு பாதைக்காக தாக்கல் செய்துள்ளார். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் கடவூர் வட்டம், இடையப்பட்டி மேற்கு கிராமம், காளியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 3 மைல் தூரம் இருக்கும். வாதிக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை நடந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

2. வாதிக்கு எவ்வளவு ஏக்கர் சொத்து உள்ளது என்றும், பிரதிவாதிக்கு எவ்வளவு ஏக்கர் சொத்து உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி, பிரதிவாதி எந்த திசையில் உள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் பிரதிவாதி நல்லுசாமி மேற்காகவும், வாதி கிழக்காகவும் உள்ளார். பிரதிவாதி எனது உறவினரா என்றால் இல்லை. வாதி, பிரதிவாதி இருவரும் எனது நண்பர்கள் ஆவார்கள். வாதிக்கும், பிரதிவாதிக்கும் முதல் பிரச்சனை என்ன என்றால் தெரியாது. நான் வாதி, பிரதிவாதி இடங்களுக்கு வேலைக்கு சென்றுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி எனது நண்பர் என்பதால், அவர்

சொன்னதின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்து, அதன் அளவுகள் மற்றும் இவ்வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றும், எனவே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதி இருவரும் எனக்கு பழக்கமே கிடையாது என்றும், அதனால் தான் வாதியும், பிரதிவாதியும் சகோதரர்கள் என்று பொய்யாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி சொத்தும், பிரதிவாதி சொத்தும் தனித்தனியாக உள்ளது என்றும், ஆனால் எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதி மற்றும் பிரதிவாதி இருவரும கூட்டு பங்குதாரர்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

4. எனக்கு படிக்க எழுத தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விரங்கள் பிரதிவாதி சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தின் 2ம் பத்தியின் இறுதியில் சொல்லியுள்ள பாதை விவரங்கள் தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதி நிலத்தை பயன்படுத்தி வருவது போலவே, வாதியும் அவரது இடத்தை சரியாக பயன்படுத்தி வருகிறார் என்றும், நான் நேரடியாக சென்று பார்க்காத காரணத்தினால் எனது பிரமாண வாக்குமூலத்தில் 3ம் பத்தியில் தவறுதலாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலே, வாதி, பிரதிவாதியின் சொத்து விவரங்கள் தெரிந்திருந்தால் இன்னும் விளக்கமாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்ற விவரமே எனக்கு தெரியாத காரணத்தினால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**